# தமிழ் இணைய மாநாடு 2010: முதல் நாள், 24 ஜூன் 2010, செய்திக் குறிப்பு

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டோடு இணைந்து 9-வது தமிழ் இணைய மாநாடு ஜூன் 23 முதல் 27 வரை கோவை, தமிழ்நாட்டில் நடைபெறுகிறது.

முதல் நாளான 24 ஜூன் 2010 அன்று, காலை 12.00 மணிக்கு தமிழ் இணைய முகப்பரங்கத் தொடக்க விழா நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். "மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு இணையத்தில் தமிழ் மொழி வளர்ச்சி அடையவேண்டியதன் தேவையை உணர்ந்து, தமிழ் இணைய மாநாட்டையும் செம்மொழி மாநாட்டோடு இணைந்து நடத்த அறிவுறுத்தினார்" என்பதை அமைச்சர் அவர்கள் நினைவுகூர்ந்தார்.

பேராசிரியர் மு. ஆனந்தகிருஷ்ணன் தலைமையுரை நிகழ்த்தினார். "தொழில்நுட்பத்தில் கருத்துவேறுபாடுகள் இருப்பது இயற்கையே. எந்த ஒரு துறையின் வளர்ச்சிக்கும் இந்தக் கருத்து வேறுபாடுகள் அவசியமே. ஆனாலும், வந்திருக்கும் அறிஞர் பெருமக்கள் மனத்தில் கொள்ளவேண்டியது ஒன்றுதான். நாம் அனைவரும் இணைந்திருப்பது செம்மொழி தமிழுக்காக. இதனை உணர்ந்து, கருத்து வேறுபாடுகள், வளர்ச்சியை நோக்கிச் செல்லுமாறு செலுத்துவது நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். தமிழ் இணைய மாநாடு 2010-ல் வழங்கப்படும் கட்டுரைகளும் அந்தக் குறிக்கோளை நோக்கியே செல்லவேண்டும்" என்றார் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன்.

மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் குறுவட்டுகளை மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ஆ.இராசா வெளியிட, சிங்கப்பூர் அரசின், மாண்புமிகு மூத்த துணை அமைச்சர் திரு எஸ். ஈஸ்வரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்தக் குறுவட்டுகளில் ஒன்றில் இலவச தமிழ் மென்பொருள்களும் எழுத்துருக்களும் உள்ளன. மற்றொன்று, குழந்தைகள் கல்வி மேம்பாட்டுக்கான எடு-பாஸ் தமிழ் நிரல் நிறுவல் குறுவட்டு ஆகும். செம்மொழி வளாகத்தில் இந்தக் குறுவட்டுகள் பல்லாயிரக்கணக்கான எண்ணிக்கையில் இலவசமாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"எந்த ஒரு மொழியாக இருந்தாலும் அதற்கான தகவல் தொடர்புக் கொள்கை மத்திய அரசின் கையில்தான் இருந்தது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்தான் மாநில அரசே நேரடியாக மொழி தொடர்பான இந்தக் கொள்கைகளைத்

தீர்மானிக்க முயற்சிகளை மேற்கொண்டார். அதில் வெற்றியும் அடைந்தார். இனி வரும் காலங்களில் தமிழ் மொழி தொடர்பான அனைத்துத் தகவல் தொழில்நுட்பத் தேவைகளுக்கும் கொள்கைகளுக்கும் மத்திய அரசு எல்லா விதங்களிலும் துணையாக இருக்கும்" என்பதை மத்திய அமைச்சர் திரு. ஆ. இராசா தனது பேச்சின்போது தெரிவித்தார்.

தமிழ் இணைய மாநாடு பற்றிய அறிமுக உரையை முனைவர் வாசு அரங்கநாதன், பென்சில்வேனியா பல்கலைக்கழகம், அமெரிக்கா அவர்கள் அளித்தார். "தமிழ் இணைய மாநாடுகளும் உத்தமம் அமைப்பும் சிங்கப்பூரில்தான் உதயம் ஆயின. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு சிங்கப்பூர் அரசுதான் உத்தமத்துக்கான செயல் அலுவலகம் நடத்த இடமும் நிதி வசதியும் செய்துகொடுத்தது. செம்மொழி மாநாட்டுடன் முதல் முறையாக தமிழ் இணைய மாநாடும் சேர்ந்து நடப்பது ஒரு வரலாற்று நிகழ்வு. இது தமிழ் இணைய மாநாட்டுக்குக் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு" என்றார்.

தொடர்ந்து விழாப் பேருரையை சிங்கப்பூரின் மாண்புமிகு மூத்த துணை அமைச்சர் திரு எஸ். ஈஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார். "இப்போதுள்ள இளைஞர்களை தமிழை நோக்கிக் கவர்வதற்கு, இன்றைய இளைஞர்களுக்கு எவை பிடித்தமானவையாக இருக்கின்றனவோ, அந்தத் துறைகளில் தமிழைப் புகுத்தவேண்டியது அவசியமாகிறது. சிங்கப்பூரில் உள்ள தமிழ் வாரிசுகளுக்கு வெளி இடங்களில் தமிழில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் வாய்ப்புகள் குறைவானவையாகவே உள்ளன. இதனைச் சரி செய்ய சிங்கப்பூர் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது" என்றார்.

இறுதியாக, உத்தமம் அமைப்பின் தலைவர் திரு தி.ந.ச. வெங்கடரங்கன் அவர்கள் நன்றி கூறினார்.

*******

மதிய உணவுக்குப்பின் நான்கு அரங்கங்களில் கட்டுரை படைத்தலும், ஓர் அரங்கில் நிபுணர் ஒருவரோடு உரையாடலுமாக தமிழ் இணைய மாநாடு 2010 தொடங்கியது.

எழுத்தாளர் சுஜாதா அரங்கில் 'கணினி வழி தமிழ் கற்றல்' என்ற தலைப்பின்கீழாக நான்கு கட்டுரைகள் படைக்கப்பட்டன. "மடிக்கணினியில் கன்னித்தமிழ் – ஒரு கற்றல் அனுபவம்" என்ற தலைப்பில் பேசிய சிங்கப்பூர் கிரசண்ட் பெண்கள் பள்ளி ஆசிரியர் சம்பந்தம் மோகன், எப்படி அவர்களுடைய பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் முற்றிலும் மடிக்கணினியைப் பயன்படுத்தி

பேச்சாற்றல், எழுத்தாற்றல் முதலிய திறமைகளை வளர்க்கிறார்கள் என்பதை விளக்கிப் பேசினார். “மாணவர்கள் தாங்கள் பேசுவதைக் கணினியில் ஒளிப்பதிவு செய்து, அதனை ஒலி, ஒளி வடிவில் பிறர் கேட்குமாறும் பார்க்குமாறும் வெளியிடுகிறார்கள். வாரம் மூன்று நாள்கள், கட்டாயத் தமிழ் வகுப்புகள் நடைபெறுகின்றன” என்றார். இந்தச் செயல்களுக்கென அவர்கள் பயன்படுத்தும் மென்பொருள்கள் பற்றியும் அவர் விளக்கிக் காட்டினார்.

முரசொலி மாறன் அரங்கில், பார்வையாளர்களுடனான கலந்துரையாடலில் மலேசியாவின் கணினி வல்லுனர் திரு. முத்து நெடுமாறன் பங்கேற்றார். “இன்றைக்கு வணிகரீதியில் தமிழ்க் கணிமைக்கு வாய்ப்புகள் குறைவாக இருந்தாலும், மேலும் மேலும் தமிழ்ப் பயனர்கள் கணினிகளைப் பாவிக்கத் தொடங்கியிருப்பதால், வரும் காலங்களில் தமிழ்க் கணிமை வணிகரீதியாகவும் வெற்றி அடைய நிறைய வாய்ப்புகள் உள்ளன” என்றார். முத்து நெடுமாறன், பல்வேறு தெற்காசிய மொழிகளுக்கு எழுத்துருக்களையும் மென்பொருள்களையும் உருவாக்குபவர். அந்தப் பின்னணியில், தமிழ் மொழி எழுத்துருக்களை உருவாக்குவதில் உள்ள உயர் தொழில்நுட்பத்தை விளக்கியதோடு, தரமான தமிழ் எழுத்துருக்களை உருவாக்குவது எப்படி என்பதற்கு பல குறிப்புகளைக் கொடுத்து உதவினார். அவர் கைப்பேசிகளுக்கு என்று உருவாக்கிய செல்லினம் என்ற தமிழ் மென்பொருள் பற்றி விளக்கம் கொடுத்தார்.

மேலும் பல கருத்தரங்கு நிகழ்வுகளும் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளபடி நடைபெற்றன:

**24.06.2010 மாலை நிகழ்வுகள் (முதல் பகுதி)**

| **24.06.2010**<br>**அமர்வு ஒன்று** | **முரசொலி மாறன் அரங்கு**<br>**தமிழ் மென்பொருள் மற்றும் இணையப் பக்கங்கள் உருவாக்கியோரோடு ஓர் உரையாடல்** |
|---|---|
| மாலை 1:30 முதல் 2:30 வரை | முனைவர் ஆ.க. இராமகிருஷ்ணன், **மனுமொழி ஆய்வகம், மின் பொறியியல் துறை, இந்திய அறிவியல் பயிலகம் (**IISC), **பெங்களூரு** |
| மாலை 2:30 முதல் 3:30 வரை | திரு.முத்து நெடுமாறன், மலேசியா |
| மாலை 3:30 முதல் 4:00 வரை | தேனீர் இடைவேளை |

| **24.06.2010**<br>**அமர்வு இரண்டு** | **கணினி வழி தமிழ் கற்றல்** | | |
|---|---|---|---|
| **அரங்கம்** | சுஜாதா அரங்கு | | |
| | தலைமை | : | முனைவர் சீதா லட்சுமி,<br>National Institute of Education |
| மாலை 1.30 முதல் 2.00 | சிங்கப்பூரில் தமிழ்மொழி | : | முனைவர் ஆ. ரா. சிவகுமாரன், |

| | | | |
|---|---|---|---|
| மணி வரை | கற்றல் – கற்பித்தலில் கணினியின் பயன்பாடு | | இணைப் பேராசிரியர், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் |
| மாலை 2.00 முதல் 2.30 மணி வரை | மடிக்கணினியில் கன்னித்தமிழ் – ஒரு கற்றல் அனுபவம் | : | திரு சம்பந்தம் மோகன், Crescent Girls School – Singapore<br>திரு முருகன், Bendemeer Sec. School,<br>திரு ஞானசேகரன், St. Theresa's Convent மற்றும்<br>திரு மோகன், Crescent Girls Secendary School |
| மாலை 2.30 முதல் 3.00 மணி வரை | கல்விக் கூடங்களில் தமிழ் உபயோகத்தினைத் தரப்படுத்துதல் | : | திரு வெ.இராமன், அனன்யா வித்யாலயா |
| மாலை 3.00 முதல் 3.30 மணி வரை | அமெரிக்காவில் நடத்தப்படும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் நடைமுறையில் இருக்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் | : | திரு இளங்கோ மெய்யப்பன் கலிஃபோர்னியா தமிழ் அகடமி |
| மாலை 3.30 முதல் 4.00 மணி வரை | தேநீர் இடைவேளை | | |

| | | | |
|---|---|---|---|
| **24.06.2010**<br>**அமர்வு மூன்று** | **வலைப்பூக்கள்** | | |
| அரங்கம் | **நா. கோவிந்தசாமி அரங்கு** | | |
| | தலைமை | : | திரு நா.கணேசன், அமெரிக்கா |
| மாலை 1.30 முதல் 2.00 மணி வரை | தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள் | : | முனைவர் துரை மணிகண்டன், டாக்டர் கலைஞர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி |
| மாலை 2.00 முதல் 2.30 மணி வரை | அதிகார மையங்களும் வலைப்பதிவுகளும்(Blogs) | : | முனைவர் N. இளங்கோ, பி.ஜி.சென்டர், புதுச்சேரி அரசு |
| மாலை 2.30 முதல் 3.00 மணி வரை | தமிழ் வலைப் பதிவுகள் – மென்பொருள் கருவிகள் – உரைத் தொகுப்பான் மற்றும் பல | : | திரு காசி ஆறுமுகம் |
| மாலை 3.00 முதல் 3.30 மணி வரை | வளர்ந்து வரும் மலேசியத் தமிழ் இணைய ஊடகம் | : | திரு சுப.நற்குணன், திருத்தமிழ் |
| மாலை 3.30 முதல் 4.00 மணி வரை | தேநீர் இடைவேளை | | |

| | | | |
|---|---|---|---|
| **24.06.2010**<br>**அமர்வு நான்கு** | **கணினி மொழியியல்** | | |
| **அரங்கம்** | **உமர் தம்பி அரங்கு** | | |
| | தலைமை | : | திரு S. ராஜேந்திரன்,<br>தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| மாலை 1.30 முதல் 2.00 மணி வரை | தமிழ் மொழிக்கான உருபனியல் உருவாக்கி | : | திரு ஆனந்த குமார்,<br>M.அமிர்த விஸ்வவித்யா பீடம் |
| மாலை 2.00 முதல் 2.30 மணி வரை | ஆங்கிலம் அடிப்படை அமைப்பு-தமிழ் மொழிபெயர்ப்புப்பொறி | : | திரு சரவணன்,<br>M.அமிர்த விஸ்வவித்யா பீடம் |
| மாலை 2.30 முதல் 3.00 மணி வரை | சங்க இலக்கியத் தொடரடைவி | : | முனைவர் கே.உமாராஜ்,<br>மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், மதுரை |
| மாலை 3.00 முதல் 3.30 மணி வரை | தமிழ் தரவின் தன்மைகளும் கணினியின் ஏற்புத் திறனும் | : | முனைவர் பி.டேவிட் பிரபாகர்,<br>சென்னை கிருத்துவக் கல்லூரி |
| மாலை 3.30 முதல் 4.00 மணி வரை | தேநீர் இடைவேளை | | |
| | | | |
| **24.06.2010**<br>**அமர்வு ஐந்து** | **தமிழ் மின் தரவு மற்றும் மின்னகராதிகள்** | | |
| **அரங்கம்** | **யாழன் சண்முகலிங்கம் அரங்கு** | | |
| | தலைமை | : | திரு முத்துகுமார் ஆறுமுகம்,<br>குமரகுரு தொழில்நுட்ப கல்லூரி |
| மாலை 1.30 முதல் 2.00 மணி வரை | மின்னனு நூலகம்-மலேயா பல்கலைக்கழகம் | : | திரு இளங்குமரன், மலேசியா |
| மாலை 2.00 முதல் 2.30 மணி வரை | தமிழில் தேடுபொறி! | : | திரு எம்.எஸ்.முரளி (செல்வமுரளி),<br>த/பெ. செல்வராஜ்,<br>தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் |
| மாலை 2.30 முதல் 3.00 மணி வரை | தமிழகத்தில் மின்னணு மென்பொருட்களின் பயனை அதிகப்படுத்தல் - தரவுகளைப் பகுப்பாயும் மென்பொருட்கள் | : | திரு ஆர்.ஜெயபிரபு,<br>காருண்யா பல்கலைக்கழகம் |
| மாலை 3.00 முதல் 3.30 மணி வரை | தமிழ் நாடு விவசாயிகளுக்காக விவசாய தளங்களில் நீடிக்கப்பட்ட குறுகீட்டு மொழி தகவல் அளிப்பு முறையும் புள்ளி விவர ஆவன மொழிபெயர்ப்பும் | : | செல்வி டி.தேன்மொழி,<br>எஸ்.எஸ்.என் பொறியியல் கல்லூரி,<br>சென்னை |
| மாலை 3.30 முதல் 4.00 மணி வரை | தேநீர் இடைவேளை | | |

**24.06.2010 மாலை நிகழ்வுகள் (இரண்டாம் பகுதி)**

| **அமர்வு ஒன்று** | முரசொலி மாறன் அரங்கு<br>**தமிழ் மென்பொருள் மற்றும் இணையப் பக்கங்கள் உருவாக்கியோரோடு ஓர் உரையாடல்** |
|---|---|
| மாலை 4:00 முதல் 5:00 | அ. இளங்கோவன், கேட்கிராஃப் |
| மாலை 5:00 முதல் 6:00 | வெ. இராமன், அனன்யா வித்யாலா |

| **24.06.2010**<br>**அமர்வு இரண்டு** | **கணினி வழி தமிழ் கற்றல்** | | |
|---|---|---|---|
| **அரங்கம்** | **சுஜாதா அரங்கு** | | |
| | தலைமை | : | முனைவர் ஆ. ரா. சிவகுமாரன்,<br>இணைப் பேராசிரியர்,<br>நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் |
| மாலை 4.00 முதல் 4.30 மணி வரை | மின்னணு வழியில் தமிழ் மொழி கற்பித்தல் மற்றும் கற்றல் | : | செல்வி எம். ஜே. ரபி சிங்,<br>மாநிலக்கல்லூரி, சென்னை |
| மாலை 4.30 முதல் 5.00 மணி வரை | தொடக்கக் கல்வி நிலையில் தமிழ் கற்பித்தல் மற்றும் கற்றல் | : | செல்வி நிர்மலா தேவி,<br>Govt. Institute of Advanced Study in Education |
| மாலை 5.00 முதல் 5.30 மணி வரை | தமிழ் எழுத்துணரிகளின் அமைப்பும் திறன் அறிதலும் | : | செல்வி செய்மா சாகி எஸ்,<br>ஸ்ரீகிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரி |
| மாலை 5.30 முதல் 6.00 மணி வரை | கணினிவழி மாணவர்களிடத்தில் தமிழ்மொழியை வளர்த்தல் | : | திருமதி சிவகௌரி கலியமூர்த்தி,<br>பீக்கன் தொடக்கப்பள்ளி, சிங்கப்பூர் |
| | | | |
| **24.06.2010**<br>**அமர்வு மூன்று** | **கணினி மொழியியல்** | | |
| **அரங்கம்** | **நா. கோவிந்தசாமி அரங்கு** | | |
| | தலைமை | : | முனைவர். எம். கணேசன்,<br>அண்ணாமலைப் பல்கலைக்கழகம் |
| மாலை 4.00 முதல் 4.30 மணி வரை | தமிழ்க் கவிதை இலக்கணத்தை அறிந்துகொள்ள தானியங்கி அமைப்பு | : | முனைவர் எஸ்.செந்தில்குமார்,<br>முனைவர். ஜி.எஸ். மகாலட்சுமி,<br>திரு என். பிரகாஷ்<br>அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. |
| மாலை 4.30 முதல் 5.00 மணி வரை | திருக்குறளில் போட்டி அடிப்படையில் தகவல் தேடல் | : | திரு இலக்கியச் செல்வன் என்.,<br>அண்ணா பல்கலைக்கழகம், சென்னை,<br>முனைவர் ஜி. வி. உமா,<br>அண்ணா பல்கலைக்கழகம், சென்னை , |
| மாலை 5.00 முதல் 5.30 மணி வரை | தமிழ் மற்றும் ஆங்கிலத்திற்கான | : | முனைவர் ஆ க ராமகிருஷ்ணன்,<br>மநுமொழி ஆய்வகம், மின் பொறியியல் |

| | | | |
|---|---|---|---|
| | இருமொழி தமிழ் உரையிலிருந்து பேச்சொலி மாற்றம் | | துறை, இந்திய அறிவியல் பயிலகம் (IISC), பெங்களூரு |
| மாலை 5.30 முதல் 6.00 மணி வரை | அறிவுத்திறன் வாய்ந்த தன்னிச்சையாகத் தமிழ்க் கதை எழுதும் மென்பொருள் அமைப்பு | : | முனைவர் ஜி.வி. உமா,<br>அண்ணா பல்கலைக்கழகம், சென்னை |

| | | | |
|---|---|---|---|
| **24.06.2010**<br>**அமர்வு நான்கு** | **தமிழ் மின்தரவு மற்றும் மின்னகராதிகள்** | | |
| **அரங்கம்** | **உமர் தம்பி அரங்கு** | | |
| | தலைமை | : | திரு மணி எம். மணிவண்ணன்,<br>சைமன்டெக் கார்ப்பரேஷன். |
| மாலை 4.00 முதல் 4.30 மணி வரை | தமிழ் மரபு சார்ந்த தகவல்களின் தகவல் வங்கி, மின்நூல்கள், ஓலைச்சுவடிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட இணைய அட்டவணை | : | திருமதி சுபாஷினி ட்ரெம்மல்,<br>Hewlett-Packard, Germany |
| மாலை 4.30 முதல் 5.00 மணி வரை | தமிழ் மின்னனு பெட்டக மேலாண்மை | : | திரு பி. அசாதுல்லா<br>Mazharul Uloom College, ஆம்பூர் |
| மாலை 5.00 முதல் 5.30 மணி வரை | மின்னனு அருங்காட்சியகம் | : | திரு மறைமலை இலக்குவனார்,<br>மாநிலக் கல்லூரி, சென்னை |
| மாலை 5.30 முதல் 6.00 மணி வரை | தமிழ் விக்கிப்பீடியா எனும் தமிழ்க் கலைக்களஞ்சியம் | : | திரு தேனி எம். சுப்பிரமணி |

| | | | |
|---|---|---|---|
| **24.06.2010**<br>**அமர்வு ஐந்து** | **இணையத் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழி மற்றும் திறவூற்று செயலிகள்** | | |
| **அரங்கம்** | **யாழன் சண்முகலிங்கம் அரங்கு** | | |
| | தலைமை | : | முனைவர் வா.மு.சே. ஆண்டவர் |
| மாலை 4.00 முதல் 4.30 மணி வரை | கணினிக் கலைச்சொல்லாக்கத்தில் புதுச்சொல் உருவாக்கம் | : | திரு சார்லஸ் எல்,<br>St.JOSEPH'S COLLEGE, திருச்சி |
| மாலை 4.30 முதல் 5.00 மணி வரை | தமிழில் பன்னாட்டு இணைய வலை முகவரி | : | திரு எஸ்.மணியம், சிங்கப்பூர் |
| மாலை 5.00 முதல் 5.30 மணி வரை | கருத்துருக்கள் – விசைப்பலகை அமைப்புகள் | : | திரு ஏ.ஆர்.அமைதி ஆனந்தன்,<br>நெடுஞ்சாலைத்துறை (Retd.),<br>தமிழக அரசு |